ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1856/7 - 2014 මාර්තු මස 31 වැනි සඳුදා - 2014.03.31

1856/7 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### பிழை திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல. ஆஹ/ஓ/2/5/1

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் இல.:03/J/83/IR//241

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 2011.09.09 ஆந் திகதிய 1722/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பக்கம் 4A இல் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் தொடர் இல. 12 இன் கீழ் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 64- ஒயகெதர கும்புர எனும் காணித் துண்டின் விஸ்தீரணம் 1.326 ஹெக்டயர் என இத்தால் திருத்தப்படுகின்றது.

ரீ. எம்.ஜே.டப்.தென்னக்கோன்,
பிரதேச செயலாளர்,
ஆனமடுவை.

பிரதேச செயலகம்,
ஆனமடுவை,
2014, மாச்சு 26.

4-390

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.:KDS/KUN /04/07/16/04/41

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் இல.:4/3/15/2012/ விஈ/188

பொதுமக்களின் பொதுத் தேவைக்காக கீழ் குறிப்பிடப் பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், குண்ட சாலை பிரதேச செயலாளர் பிரிவில் உடகம்பஹ கோரளையின் சிறு பிரிவில், கோனவல கிராமத்திலமைந் துள்ள கண்டி மாவட்ட பொறுப்பான நில அளவை யாரினால் 2014.02.19 ஆந் திகதியுடைய வரைபடத்தின் இலக்க மஹ 6332 முதற் சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்ட கிங்ஸ்டன்தோட்டம் என்னும் காணியின் முழு ஹெக்டயாரில் 1.0488 விஸ்தீரண முடைய கீழ் காணப்பட்ட எல்லைக்குள் அமைந்துள்ள காணித்துண்டு.

**துண்டு இல. 01: காணியின் பெயர்: கிங்ஸ்டன் தோட்டம்; விஸ்தீரணம்: 1.0488 ஹெக்டயார்.**

எல்லைகள்:-

வடக்கு: பாதை (பிரதேச சபை) ஏ. ஜீ. சுமனதாச உரிமைகோரும் கிங்ஸ்டன்தோட்டமும் காமினி செனவி ரத்ன உரிமைகோரும் கிங்ஸ்டன்தோட்டமும்; கிழக்கு: காமினி செனவிரத்ன உரிமைகோரும் கிங்ஸ்டன் தோட்டமும் செனவிரத்ன உரிமைகோரும் கிங்ஸ்டன் தோட்டமும்; தெற்கு: செனவிரத்ன உரிமைகோரும் கிங்ஸ்டன்தோட்டமும் பாதையும் (பிரதேச சபை); மேற்கு: பாதையும் (பிரதேச சபை) ஏ. ஜீ. சுமனதாச உரிமைகோரும் கிங்ஸ்டன்தோட்டம்.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்

என்.டி.எஸ்.வீரக்கொடி,
இலக்கம் 249சி,
மஹா விஹார பாதை,
மொல்லிகொட,
வாத்துவ.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறிப்பிட்ட காணிக்கு அதிகாரங்கள் அல்லது வேறு தொடர்புகள் இருப்போர் அனைவரும் தத்தமது அல்லது அவர்களின் எழுத்து மூல அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள் 2014.05.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னை நேர்காணல் வேண்டும்.

மேலும் 2014.05.12 ஆந் திகதிக்கு முன்னர் அந்தக் காணி / காணிகள் சம்பந்தமான அவர்களின் உரிமைகள் மீதான தன்மை பற்றியும், அந்தக் காணி எடுத்துக் கொள்ளப்படுவதால் நஷ்டஈடு கோருவதற்கான காரணங்கள் பற்றியும், நஷ்டஈட்டுத் தொகை கணக்கீடு செய்யப்பட்ட விதம் பற்றியும், எனக்கு இரண்டு பிரதிகள் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய உரித்துரிமை பரிசீலனை செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

எல்.ஏ.டீ.கீதா இந்திராணி,
பிரதேச செயலாளர்,
குண்டசாலை.

பிரதேச செயலகம்,
குண்டசாலை,
2014, மாச்சு 19.

4-443

,